தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சட்ட மன்ற மேலவையின் ஐம்பத்தி மூன்றுவது கூட்டத்தொடர்

திங்கட்கிழமை, 1978 ஏப்ரல் 24.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு தற்காலிகத் தலைவர் (திரு கே. எஸ். அப்துல் வகாப்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. புதிய உறுப்பினர்கள் எடுத்துக்கொள்ளும் உறுதிமொழி.

மாண்புமிகு மேலவைத் தற்காலிகத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களே, மேலவைத் தலைவர், துணைத்தலைவர் ஆகிய இரு பதவிகளும் காலியாக இருப்பதால், மேலவைத் தலைவரை இவ்வவை தேர்ந்தெடுக்கிற வரையில் செய்ய வேண்டிய முன் அலுவல்களை நிறைவேற்றுவதற்கென என்னை மேலவையின் தற்காலிகத் தலைவராக ஆளுநர் அவர்கள் நியமித்தமைக்கு, அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள, நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களை நான் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்று எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலவை விதியின்படி சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அவையில் முதன் முதலாக தத்தம் இருக்கையில் அமருமுன் இந்திய அரசியலமைப்புச் சட்டம் 188 வது பிரிவில் விதித்துள்ளபடி உறுதிமொழி கூறி, அதில் கையொப்பமிட வேண்டும். அந்த உறுதிமொழி நிகழ்ச்சியினை நிறைவேற்றவும் ஆளுநர் அவர்கள் என்னை நியமித்திருக்கிறார்கள்.

இம்மன்றத்தில் கடைபிடித்து வரும் மரபின்படி, முன்னாள் மேலவைத் துணைத் தலைவரையும், முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரையும், பின் மற்ற உறுப்பினர்களை அவர்கள் பெயர்களின் தமிழ் அகர வரிசைப்படியும் மேலவைச் செயலாளர் அழைப்பார். உறுப்பினர்கள் மேடை அருகே வந்து, தேர்தல் சான்றிதழைச் செயலாளரிடம் கொடுத்து, அவரிடமிருந்து அச்சிட்ட உறுதி மொழி இதழைப் பெற்று, அதன்படி உறுதிமொழி எடுத்துக் கொண்டு, அதிலும், பதிவேட்டிலும் கையொப்பமிட்டு, பின்னர் இருக்கையில் சென்று அமரும்படி வேண்டிக் கொள்கிறேன்.

[மேலவைத் தற்காலிக தலைவர்] [1978 ஏப்ரல் 24

தற்போது புதிய உறுப்பினர்களுக்கு மேலவையில் உட்காருவதற்கு தனி இடம் ஒதுக்கப்படவில்லை. நாளை மறுநாள் உறுப்பினர்களுக்கு தற்காலிகமாக மேலவையில் இடம் ஒதுக்கப்படும். மேலவைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் மேலவையின் விதிகளின்படி தனி இடம் உறுப்பினர்களுக்கு தலைவரால் ஒதுக்கப்படும்.

நாளை மறுநாள் மேலவைத் தலைவர், துணைத்தலைவர் தேர்தல்கள் இம்மேலவையில் நடைபெறும். அதற்கான வேட்புத் தாள்களை நாளை நண்பகல் 12 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். சட்ட மன்ற மேலவை விதிகளின்படி மேலவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தலில் கலந்து கொள்பவர்களும், அவர்களின் பெயர்களை முன்மொழிபவர்களும் அதை வழிமொழிபவர்களும் தேர்தலுக்கு முன் உறுதிமொழி எடுத்திருக்கவேண்டும்.

இப்பொழுது செயலாளர் அவர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ள உறுப்பினர்களை அழைப்பார்,

(பின்னர் செயலாளர் அவர்கள் உறுப்பினர்களை உறுதிமொழி எடுத்துக் கொள்ளும்படி அழைத்தார்கள்)

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்:

(1) *திரு. ம. பொ. சிவஞானம் (த)
(2) திரு. எம். சங்கரலிங்கம் (த)
(3) திரு. எஸ். ஆறுமுகம் (த)
(4) திரு. சி. இராமலிங்கம் (த)
(5) *திரு. கே. இராமமூர்த்தி (த)
(6) திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (த)
(7) *திரு. டி. சந்தோஷம் (ஆ)
(8) திருமதி. பி. சீதாதேவி கிருஷ்ணசாமி (த)
(9) *திரு. ஏ. ஆர். தாமோதரன் (ஆ)
(10) திரு. ஏ. நல்லசிவம் (த)
(11) *திரு. ஜே. எம். மியாகான் (ஆ)
(12) திரு. கே. மீனாட்சிசுந்தரம் (த)
(13) திரு. செ. முத்துசாமி (த)
(14) திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (த)

(செயலாளர் அவர்கள் திரு. ஜி. வசந்த பை அவர்களை அழைத்தார்கள். திரு. ஜி. வசந்த பை அவர்கள் அவையில் இல்லை.

(15) *திரு ஈ. எஸ். வெங்கடேசன்(த)
(16) டாக்டர் எச். வி. ஹண்டே (த)

மாண்புமிகு மேலவைத் தற்காலிகத் தலைவர்: அவையின் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 26ஆம் தேதி காலை 10 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 4-22.)

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(*) கடவுள் பெயரால் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.

(த) தமிழில் உறுதிமொழி எடுத்துக் கொண்ட உறுப்பினர்கள்.

(ஆ) ஆங்கிலத்தில் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

புதன்கிழமை, 1978 ஏப்ரல் 26

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தற்காலிகத் தலைவர் (திரு. கே. எஸ். அப்துல் வகாப்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. சட்ட மன்ற மேலவைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு தற்காலிகத் தலைவர் (திரு. கே. எஸ். அப்துல் வகாப்): மாண்புமிகு உறுப்பினர்களே, மேலவையின் இன்றைய அலுவல் இந்திய அரசியலமைப்பின் 182-வது பிரிவின்படி மேலவைத் தலைவர் அவர்களைத் தேர்ந்தெடுப்பதாகும். அப் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளரின் வேட்புத்தாள் செயலாளரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலவை விதி 4, துணை விதி (4)ன்படி தலைவர் பதவிக்கு முறைப்படி மொழியப்பட்டுள்ள வேட்பாளரின் பெயரையும், அவரை முன்மொழிந்தவர் பெயரையும் வழிமொழிந்தவர் பெயரையும், இவ்வவையில் படிக்க வேண்டும். அதன் விவரம் வருமாறு :—

வேட்பாளரின் பெயர் : திரு. ம. பொ. சிவஞானம்.

முன்மொழிந்தவர் : திரு. கே. இராஜா முகமது.

வழிமொழிந்தவர் : திரு. இராம. வீரப்பன்.

ஆக, ஒரே ஒரு வேட்பாளர் பெயர் மட்டுமே மேலவைத் தலைவர் பதவிக்கு மொழியப்பட்டிருப்பதால், நான் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் இம்மேலவையின் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். (உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரம்.)

இத்துடன் எனது அலுவல் முடிவடைகிறது. இப்பொழுது மேலவைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களுக்கு எனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னைப் பெறுத்தவரையில், நான் ஒரு கட்சியைச் சார்ந்தவன் என்ற முறையில் முஸ்லீம் லீக் கட்சியினுடைய பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் நான் சிலம்புச் செல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் இன்றைக்குச் சிறப்புப் பெற்றிருக்கிறார்கள், பெருமை பெற்றிருக்கிறார்கள் என்றால், அது தமிழுக்குக்